இதயபூமியின் இணையற்ற போராளி பிரி. பால்ராஜ்

இதயச்சந்திரன்
(ஒரு பேப்பருக்காக)

இழப்புக்களை தாங்கும் வலிமைமிக்க தமிழினம், இன்னுமொரு பேரிழப்பினை எதிர் கொள்கிறது.

20.05.2008 செவ்வாய்க்கிழமை பிற்பகர் 2.00 மணியளவில் மாரடைப்பால் சாவடைந்த பிரிகேடியர் பால்ராஜ் பிரிவால் உலகத் தமிழினம் சோகத்தில் ஆழ்ந்துள்ளது.

கந்தையா பாலசேகரம் என்கிற இயற்பெயர் கொண்ட முதுநிலைத் தளபதி பால்ராஜ் 1982ஆம் ஆண்டளவில் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தன்னை இணைத்துக் கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்குத் தொடுவாய் கிராமத்தில் இவர் பிறந்தாலும், வளர்ந்தது, வாழ்ந்தது எல்லாம் திருமலை மாவட்டத்திலுள்ள புல்மோட்டை கிராமத்தில் என்பது குறிப்பிடத்தக்கது.

பால்ராஜின் பிறப்பும், வளர்ப்பும் இதய பூமியின் நிலப்பரப்பில் அமைந்திருந்த கிராமங்களைச் சுற்றிப் பின்னிப் பிணைந்திருந்த காரணத்தினால், பேரினவாத அரக்கனின் நில ஆக்கிரப்பு வீச்சு மிக எளிதாகவே இவரை ஆழமாகப் பாதித்திருந்தது.

தமது இயக்கத் தொடர்புகளை 82இல் ஏற்படுத்தியிருந்தாலும், 1983ஆம் ஆண்டு அளவில் முழுமையான பங்களிப்பினை பால்ராஜ் செலுத்தத் தொடங்கினார்

படையில் இணையும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற வயதெல்லையை, தளபதி பால்ராஜ் மீறவில்லையென்பதையும் சிறுவர் மீது கரிசனை கொள்ளும் ஐ.நா.நிறுவனங்கள் குறித்துக் கொள்ளலாம்.

நவம்பர் 27ஆம் திகதியானது, மாவீரர்களை நினைவு கொள்ளும் தேசிய நாளாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. 1965 ஆம் ஆண்டு இதே நாளில்தான் பால்ராஜ் என்றழைக்கப்படும் பாலசேகரம் பிறந்தார். தனது பிறந்த நாளன்று, மாவீரர் துயிலுமில்லங்களுக்குச் சென்று, விடுதலைக்கு விதையாகிப் போன மனிதர்களுக்கு அக வணக்கம் செலுத்தும் உயரிய மரபொன்றையும் அவர் தனக்குள் உருவாக்கிக் கொண்டார்.

இத்தகைய மக்கள் நேசிப்பாளனின் உயர் விழுமியப் பண்பாட்டுத் தளத்தினைப் புரிந்து கொள்ள வேண்டியது விடுதலை வேட்கையைத் தன்னகத்தே கொண்டிருக்கும் ஒவ்வொரு மனிதனின் சமூக நெறியாக அமைகிறது.

இவரின் போரியல் ஆளுமையை சிலாகிக்கும் விடுதலை விரும்பிகள், மானிட சமத்துவச் சூத்திரத்தை தனதாக்கிக் கொண்ட பால்ராஜின் பிரிக்க முடியாத ஆத்மீக தரிசனத்தையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இம்மனிதன், கலந்து கொள்ளாத பெருஞ் சமர்களும் இல்லை. தரிசிக்காத அழிவுகளும் கிடையாது.

மனிதத்தை இழக்காத மாவீரனாக வாழ்ந்த தற்கு பால்ராஜ் பெருஞ்சான்று.

இவருடன் பேசிப்பழகிய அத்தனை மனிதர்களும் ஒரே வார்த்தையில் 'அற்புதமான சிறந்த பண்பாளன்' என்று இவர் குறித்துப் பெருமிதம் கொள்கிறார்கள்.

இக்கருத்திற்கு, முரண்நிலையான எதிர் நிலைத் தளமொன்று இருப்பதாகத் தெரிய வில்லை. பரந்துபட்ட வெகுஜன மக்கள், திரண்டெழுந்து, தன்னியல்பான எழுச்சியுடன் பால்ராஜிற்கு வழங்கிய இறுதிமரியாதையானது மக்களுடன் ஒன்றிணைந்து வாழ்ந்த சகமனிதன் என்கிற அடையாளத்தை பதிவு செய்கிறது. இவர் ஏற்றுக் கொண்ட ஆயுத வழிப் போராட்ட முறைமையை, மக்கள் அங்கீகரித்ததின் சான்றாகவும் இவ் இறுதி நிகழ்வுகள் தெளிவாக புலப்படுத்துகின்றன.

தேசிய விடுதலைப் போராட்டத்தில், பிரிகேடியர் பால்ராஜ் அவர்களின் வகிபாகம் பற்றியும் சில விடயங்களை இங்கு கூற வேண்டும்.

இயக்கச் செயற்பாட்டு ஆரம்ப கால கட்டத்தில், மேஜர் பசீலனின் வழி நடாத்தலில் தனது போராட்டப் பயணத்தை ஆரம்பித்தார் பால்ராஜ்.

இறுதியாகக் களமாடிய ஆனையிறவு பெரும் படைத்தள அழித்தொழிப்புச் சமர் வரை இவர் பங்கு கொண்ட அனைத்துப் போர்கள் பற்றியும் பல ஊடகங்களில் விரிவாக எழுதப் பட்டுள்ளது.

இங்கு விஷேடமாக குறிப்பிடத்தக்க விடயமொன்று உண்டு. அதாவது கெரில்லாப் போரியல் முறையிலிருந்து மரபு வழிப் போரியலிற்கு மாறுதலடைந்த அல்லது விரிவடைந்த தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் பல படிநிலை மாற்றங்களை உள்வாங்கிக் கொண்ட ஒரு முக்கிய தளபதியாக பிரிகேடியர் பால்ராஜ் அவர்கள் கணிக்கப்படுகிறார்.

சிறு படையணியோடு, மட்டுப்படுத்தப்பட்ட ஆயுத வளத்தைக் கொண்டு, மரபு சார் போரினை பரிமாணத்தையும் இத்தாவில் சமரில் நிறுவியுள்ளார்.

எதிரியின் பரந்த பிரதேசத்தினூடாகவே பின் தளத்திற்கு திரும்பிச் செல்ல வேண்டுமென்கிற நிர்ப்பந்தமும், மரபுப்போர் படைக்கலங்களை எதிர் கொள்ள வேண்டிய அழுத்தமும், ஒன்று சேர்ந்த வகையில், அதனை முகங்கொண்டார் பிரி. பால்ராஜ்.

இவருடைய ஆரம்ப காலப்போர் அனுபவங்கள் மிகவும் வித்தியாசமானவை. அடர்ந்த காடுகளால் சூழப்பட்ட தனித்துவமான பிரதேசத்தில், மிகக் கடினமான முன்னெப்போதும் சந்தித்திராத பிராந்திய வல்லரசாளரின் இராட்சத பலத்தை எதிர் கொள்வது இலகுவான விடயமல்ல. வியட் கொங் போரளிகளுக்கு கிடைத்த சீன - இரஷ்ய பின்புல ஆதரவு கூட, விடுதலைப்புலிகளுக்கு கிட்டவில்லை.

மீதமுள்ள படைக்கல வளத்தையும் ஆளணிகளையும் ஒன்று திரட்டி, அடர்ந்த காட்டினைக் கவசமாக மாற்றி, பெரும் வல்லரசான இந்தியாவுடன் சமரிட்ட வரலாற்று, மிக உறுதியான போரியல் பாடத்தினை பால்ராஜ் அவர்களுக்கு கற்றுக் கொடுத்துள்ளது.

ஆனாலும் கடந்த சில வருடங்களாகவே ஆழ ஊடுருவும் படையணி பற்றிய கேள்விகளே இவர் மனதை ஆக்கிரமித்திருந்து. தனிப்பட்ட உரையாடல் ஒன்றின்போது, இவ்வகையான ஆழ ஊடுருவும் படையணிகள் (LRRP) வேறு நாடுகளில் செயற்பட்ட விதம் குறித்தும். அதனால் பாதிப்புற்ற விடுதலை இயக்கங்கள் எவ்வாறு அதனை எதிர் கொண்டனவென்பது பற்றியும் அக்கறையுடன் அறிந்து கொள்ள முயன்றார் பிரி. பால்ராஜ்.

பெருஞ் சமர்களில் இவர் ஈடுபட்ட காலத்தில், இவ்வகையான ஆழ ஊடுருவும் எதிரியின் தாக்குதல்கள் மிகக் குறைவாகவே காணப்பட்டது.

25 ஆண்டு கால, பதிவு செய்யப்பட்ட பால்ராஜின் போரியல் வரலாற்றில், தேசியத் தலைவரால் இவருக்கு வழங்கப்பட்ட அதியுயர் நிர்வாகப் பொறுப்பாக சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதன்மைத் தாக்குதல் தளபதியும், தலைவரையே ஆகர்சித்த நண்பனுமாகிய சீலன் என்றழைக்கப்பட்ட லூகாஸ், சார்ள்ஸ் அன்ரனியின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட முதல் மரபுவழிப் படையணிக்கு தலைமை தாங்கும் பேற்றினை அடைந்தார் பிரி. பால்ராஜ்.

வன்னிக் களம் புகட்டிய வியட்நாம் பாடங்கள், இந்திய மரபுப் படையணிகள் வழங்கிய நேரடி போரனுபவங்கள், மரபு படையொன்றின் உருவாக்கத்திற்கு உந்து சக்தியாகவும், அனுபவப் பதிவுகள் உரமாகவும் அணி சேர்த்துள்ளன.

இவரின் அனுபவப் பகிர்வுகளையும், ஆற்றலையும் உள்வாங்கிக் கொண்ட பல போராளிகள், பாலசேகரத்தின் மண்மீட்பு இலட்சியத்தை புதிய எழுச்சி கலந்து காவிச் செல்வார்களென்பது உறுதி.

அஞ்சலிகள்!

சினிமாக் குப்பைகளிலும் சின்னத்திரை குழறல்களிலும்
சிந்தனையைத் தொலைத்துவிட்டு குழாயடிகளிலேயே வீரங்காட்டும்
விவஸ்தையில்லா வீணர்களுக்கு தாய்மண் காத்தலையே
விரதமாக்கி வித்தைகள் புரிவது வீணானதாய்ப் படலாம்

கட்டிளம் காளைகளின் கடைக்கண் பார்வைக்காய்
காலமெல்லாம் காத்திருப்பதும் களியாட்டங்களில் கரைவதுமே
கன்னியர்க்கு விமோசனம் என்றெண்ணும் சிங்காரிகளுக்கு
களத்துத் தியாகங்களும் தீரங்களும் ஏளனங்களாகலாம்.

அந்நிய மொழியும் அடுத்தவன் கலாச்சாரமுமே கண்ணில் தெரிய
அடுத்தவனின் அழுக்குகளையே அரவணைத்து ஆராதித்து
அடுக்களையும் அரட்டையுமே அகிலமான ஆரணங்குகளுக்கு
அடுத்தவனுக்காய வாழ்வதென்பதும் அர்த்தமற்றதாய் படலாம்

பெண்களின் அந்தரங்கங்களையும் ஆபாசங்களையும் பேசுபொருளாக்க
பேனரவைப் பிடித்துள்ள எழுத்துலக விபச்சாரிகளுக்கு
மண்ணையும் மக்களையுமே மனத்தில் வைத்துள்ள
மகளிரின் மகத்துவம் மலினமாய்த் தெரியலாம்

பெண்ணடிமை எதிர்ப்பினை பேச்சுக்கு மட்டுப்படுத்திப்
போதனைகள் செய்கின்ற பேதைகளுக்கும் பெருச்சாளிகளுக்கும்
சமர்க்களத்தில் சமமாய் சரித்திரம் சமைக்கும்
சாதனை நாயகிகளும் சாதாரணமாய்த் தெரியலாம்

தண்ணீருக்குக்கூட அடுத்தவனை இரந்து நின்றாலும்
தமிழன் பொங்கக்கூடாது என்றெண்ணும் தந்திரக் காரருக்குத்
தலையாட்டிக் கொண்டு சங்கப் பெண்ணின் வீரத்தை
தாலாட்டுக்கே மட்டுப்படுத்தியவருக்கும் தற்கொடை பரிகாசமாயிருக்கலாம்

அம்மணமாய் நிற்பதே அழகென்று அடம்பிடிப்பவர்களுக்கு
ஆடையின் அவசியத்தை உரைப்பதிலே என்ன பயன்?
அவர்கள் அம்மணமாகவே நிற்கட்டும் - ஆனால்
அடுத்தவன் இகழாமல் வாழநினைப்பவர்கள் ஆடைகளை நெய்வோம்.

(தமிழுக்காய், தமிழ்மண்ணுக்காய் தற்கொடை தந்த தமிழ் சகோதரியின் தியாகத்தைக் கொச்சைப்படுத்திய இந்தியாவைச் சேர்ந்த குட்டிரேவதிக்கான பதில்)

- காவியா

SRI ATHIPARASAKTHI ASTROLOGY CENTRE

World Famous Special Astrologist!
Face Reading & Palm Reading



1ST FLOOR 49 HIGH STREET
EAST HAM, LONDON, E6 1SH
(NEAR PRIMARK STORE)
Opening Hours: 10a.m – 7 p.m
7 Days a week

Call: **S.P. SRIRAM GURJI**
AADIVASI MUKKIYA

இந்தியாவில் ஸ்ரிகாகுளம் மாவட்டம் அருகில் உள்ள அதி பயங்கர வனத்தில் மூன்று குருமார்களிடத்தில் 5 வயது முதல் கானகத்தில் கடும் விரதம் இருந்து கடும் பயிற்சி செய்து 10 வருடங்கள் ஜோதிடம், வாஸ்து, குரு மந்திரங்கள் மூலம் பில்லி சூனிய நிவரத்தி ஆகியவைகள் கற்று இந்தியாவில் பல பிரபலங்களுக்கு ஜோதிடம் பார்த்து அவர்கள் பெரிய பதவியை அடைந்துள்ளார்கள். பல நாடுகளுக்குச் சென்று வியாபார நோக்கு இல்லாமல் சேவை மனப்பான்மையுடன் மக்களுடைய பிரச்சனைகளைத் துார்த்து வருகின்றார்.

உத்தியோக பிரச்சினை, குடும்ப உள் விவகாரம், நிதி நிலை விவகாரம், கோர்ட் விவகாரம், எதிரிகள் தொல்லை, விசா பிரச்சினை, வியாபார முன்னேற்ற மின்னை, பில்லி சூனியம், மற்றும் எல்லாவித பிரச்சனைகளையும், மூலிகை மருந்து மூலமும், ஆயுர்வேத மருந்து மூலமும், டாக்டர்கள் குணப்படுத்த முடியாத வியாதிகளையும், மனப்போராட்டங்களைப் போக்கச் செய்வார்.

இவர் பல நாடுகளுக்குச் சுற்றி இலண்டனுக்கு வந்துள்ளார். சில காலமே இங்கு வசிப்பார். அதற்குள் நீங்கள் அவரைத் தொடர்பு கொண்டு உங்கள் பிரச்சனைகளைக் கூறிப் பரிகாரம் தேடுங்கள்.

திருமண பொருத்தம் பார்த்துக் குறிப்பு கொடுக்கப்படும்.

Mob: **07918 808 855**
07506 933 790

S.P. SRIRAM GURJI
AADIVASI MUKKIYA
Spoken languages: Tamil, Telugu, Hindi, kannada & English.